## திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்,

# முரசொலிமாறன் 22ஆம் ஆண்டு நினைவு நாள்!

### சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி,

### டாக்டர் எ.வ.வே.கம்பன் மலர் தூவி மரியாதை

திருவண்ணாமலை, நவ.24-

திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 22ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன்ஆகியோர் முரசொலிமாறன் திருவுருவப்படத்திற்கு மலர்த்தூவி மரியாதை செலுத்தினார்.

23.11.2025ஞாயிற்றுக் கிழமை காலை 11.00மணிக்கு திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில், மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திராவிட இயக்க தத்துவ பேராசானுமான முரசொலி மாறன் அவர்களின் 22ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலிமாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர்த் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாவட்டதுணை செயலாளர்பிரியாவிஜயரங்கன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாநகர துணை மேயர் சு.ராஜாங்கம்

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, பால முரளிகிருஷ்ணா, பகுதி செயலாளர் குட்டி க.புகழேந்தி,

ஒன்றிய செயலாளர் ஆராஞ்சி ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர் மோட்டூர் பாலசுப்பிரமணி, து.சக்கரவர்த்தி, இர.செல்வராஜ், தினேஷ்சம்பத்,

மாவட்ட பிரதிநிதி கள் கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட்மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் டி.எம்.கதிரவன், லக்கி.அரவிந்த், எஸ்.சமயராஜ்,இராயல் தியாகு உட்பட ஏராளமானோர் உடன் இருந்தனர்.

---

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




### பிஹார் தேர்தலில் முறைகேடு: நிதியமைச்சர் கணவர் புகார்

பொருளாதார நிபுணரும், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவருமான பரகலா பிரபாகர், பிஹார் தேர்தலில் முறைகேடு நடந்துள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார். பதிவான வாக்குகளை விட எப்படி 1.77 லட்சம் வாக்குகள் அதிகமாக எண்ணப்பட்டன என்பது குறித்து நாட்டு மக்களுக்கு ECI விளக்க வேண்டும். மேலும், SIR-க்கு பிறகான இறுதி வாக்காளர் பட்டியலை விட, மொத்த வாக்காளர் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

---

## புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி மக்களை

# ரவுடிகள், கந்துவட்டி கும்பலிடம் இருந்து காப்பாற்றிடுக!

### நந்தா சரவணன் - சவுரிராஜன் தலைமையில் துணைநிலை ஆளுநரிடம் மனு !

புதுச்சேரி, நவ. 24-

புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதியில் அதிகரித்து வரும் கந்துவட்டி கும்பல் அராஜகம், ரவுடிகள் அட்டூழியம், போதை கும்பலின் அடாவடிகளை இரும்புக்கரம் கொண்டு கட்டுப்படுத்தி வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அச்சமின்றி வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று தி.மு.க. சார்பில் துணை நிலை ஆளுநரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

புதுச்சேரி மாநிலம் முத்தியால்பேட்டை தொகுதி திமுக சார்பில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன், தொகுதி செயலாளர் சவுரிராஜன் ஆகியோர் தலைமையில் திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் நேற்று முன்தினம் மாலை புதுச்சேரி ராஜ்நிவாசில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனை சந்தித்து கோரிக்கை மனு ஒன்று அளித்தனர்.

மனுவில் கூறியிருப்பதாவது: -

புதுச்சேரி முத்தியால் பேட்டை தொகுதியில் ரவுடிகள் மாமூல் கேட்டு வணிகர்களை மிரட்டுதல், கொடுக்கவில்லை என்றால் கடையை சூறையாடுதல், கத்தியை காட்டி மிரட்டுவது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடக்கிறது. பூ, பழம், மீன் விற்கும் பெண்கள், தட்டு வண்டியில் வியாபாரம் என சிறு வணிகம் செய்பவர்களிடம் கந்துவட்டி கொடுத்து கட்டுவதில் தாமதம் ஏற்பட்டால் அவர்களை மிரட்டுவது தொடர்கதையாகி வருகிறது. இந்த தொழில்களில் உள்ளூர் மற்றும் வெளியூர் நபர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வணிகர்கள், பொதுமக்கள் நடமாட முடியாத நிலை உள்ளது. கஞ்சா உள்ளிட்ட போதை கும்பலின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்கள், அவர்களை அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் அச்சப்படும் நிலை உள்ளது. தமிழ்நாட்டில் கந்துவட்டி தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் புதுச்சேரியில் சட்டம் இயற்றிட வேண்டும். புதுச்சேரியில் குறிப்பாக முத்தியால்பேட்டை தொகுதியில் கந்துவட்டி கும்பல், மாமூல் கேட்டு மிரட்டும் ரவுடிகள், கஞ்சா விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வியாபாரிகள், பொதுமக்கள் அச்சமின்றி வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது, தொகுதி திமுக அவைத் தலைவர் எழிலன், மாநில பிரதிநிதி தனசேகர், செயற்குழு உறுப்பினர்கள் சண்முகம், வெங்கடேசன், வேணு, மாநில நெசவாளர் அணி அமைப்பாளர் செந்தில் முருகன், துணை அமைப்பாளர் சந்துரு, மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் தங்கராசு, முன்னாள் மாநில சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் அல்போன்ஸ், கிளைக் கழகச் செயலாளர்கள் பிரகாஷ் @ குமரவேல், பாஸ்கர் @ ஆறுமுகம், சண்முகம் ஆகியோர் உடனிருந்தனர்.

---

## அனைத்து ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் கருத்துக் கேட்பு கூட்டம்!

# தமிழ்நாடு அரசுக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் நன்றி!

### சங்க மாநில தலைவர் கு. தியாகராஜன் அறிக்கை

சென்னை நவ. 24-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை வருமாறு;

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் உள்ளிட்ட பல்வேறு ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் உடன் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி அவர்கள் பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடத்தினார்.

கடந்த 19ஆம் தேதி அன்று ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு பணியில் தொடரவும், பதவி உயர்வு பெறுவதற்காகவும் உச்ச நீதிமன்ற தீர்ப்பை பின்பற்றி சிறப்பு தகுதி தேர்வு நடத்திட அறிவிப்பானை வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பாணையில் பல்வேறு மாநிலங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகளையும் தேசிய கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட நடைமுறைகளையும் பின்பற்றாமல் வெளியிடப்பட்டதால் அதனை உடனடியாக தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் பள்ளிகளுக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உடனடியாக அந்த அறிவிப்பாணையை திரும்ப பெற செய்ததது.

அதைத் தொடர்ந்து 21ம் தேதி சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து ஆசிரியர்களுக்கான சிறப்பு தகுதி தேர்வு குறித்து விரிவாக ஆலோசனை நடத்தினார்.



கூட்டத்தில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் கலந்து கொண்டு ஆசிரியர்களின் சார்பாக பல்வேறு கருத்துகளை முன்வைத்தது முதலாவதாக உச்ச நீதிமன்றம் வெளியிடப்பட்ட தீர்ப்பை மறுசீராய்வு செய்ய தமிழக அரசு மற்றும் பள்ளிக்கல்வித் துறையின் சார்பாக சீராய்வு மனு தாக்கல் செய்ததற்காக நன்றி தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஆசிரியர் நலம் காக்கும் வகையில் தேசிய கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பாக வெளியிடப்பட்ட செயல் முறைகளில் உரிய திருத்தம் ஏற்படுத்தவும் தமிழக அரசின் பள்ளி கல்வித்துறை மூலம் அழுத்தம் கொடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. நடைபெற உள்ள பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் இதற்கான உரிய திருத்தத்தை மேற்கொள்ள தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

சிறப்பு தகுதி தேர்வானது பல்வேறு மாநிலங்களில் எவ்வாறு நடத்தப்படுகிறது அங்கு பின்பற்றப்படும் வழிமுறைகள் என்ன என்பது குறித்து அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அதை பின்பற்றி தமிழகத்திலும் ஆசிரியர்களின் நலம் காத்திடும் வகையில் சிறப்பு தகுதி தேர்வும் அதன் மதிப்பீடும் அமைய வேண்டும் என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது

மேலும் ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சிறப்பு ஆசிரியர் தகுதி தேர்வானது பணியில் தொடர்வதற்கும் பதவி உயர்வு பெறுவதற்கும் தேவை இல்லை என்பதை உறுதியாக எடுத்து கூறப்பட்டது.

மாற்றுத்திறனாளி ஆசிரியர்களுக்கு சிறப்பு தகுதி தேர்வு எழுதுவதிலிருந்து முழுவதும் விலக்கு அளிக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

கேரளா அரசு விதிவிலக்கு அளித்தது போல NET/SET/M.Phil/Phd முடித்த ஆசிரியர்களுக்கு தகுதித் தேர்வில் இருந்து விலக்களிக்க வேண்டும் என கூட்டத்தில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக முக்கிய கருத்தாக முன்வைக்கப்பட்டது.

ஆசிரியர்களின் மூதுரிமைக்கு முன்னுரிமை அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. இறுதியாக அனைத்து ஆசிரியர் சங்க பிரதிநிதிகளின்கருத்துகளை உள்வாங்கி பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விரைவில் முதல்வர் அவர்களை சந்தித்து உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார் இது போன்ற கருத்துக் கேட்பு கூட்டத்தை ஏற்பாடு செய்ததற்காக தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு பள்ளி கல்வித்துறைக்கும் தமிழ்நாடு ஆசிரியர் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கு. தியாகராஜன் தெரிவித்துள்ளார்.



அருப்புக்கோட்டை பந்தக்குடி அரசு உயர்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் துவக்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்.

---

## கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில்!

# சிறுபான்மையினர் போற்றும் இளைஞர் எழுச்சி நாள் விழா!

### செயலாளர் டாக்டர்.அ. சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, நவ. 24-


நவ.27 இளைஞர் எழுச்சி நாளையொட்டி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. இன்று மாலை 4 மணியளவில் இராயப்பேட்டை புதுக்கல்லூரியில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர்.அ. சுபேர்கான் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஷ்பொய்யாமொழி அவர்கள், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி.சா.மு.நாசர்அவர்கள், மத்தியச் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதிதிமாறன் மற்றும் சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் தலைவர் டி.பி.எம்.மைதீன்கான், துணைத்தலைவர் ஜோசப்ராஜ், இணைச் செயலாளர் ஜெரால்டு, துனைச் செயலாளர்கள் இரா.அன்வர்கான், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, அடையாறு ஷபீல்கான், முனவர் ஜான், எம்.நூருல்லா, வீ.விஜயகுமார், ரபி அகமது, அன்வர் அலி, சாகுல் அமீது, எஸ்.டி.ஆர். பொன்சீலன், ராபர்ட் @ ராஜதுரை, இராஜேஷ் ஜெயின் மற்றும் திருவல்லிக்கேணி பகுதி கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், சேப்பாக்கம் பகுதி கழகச் செயலாளர் எஸ்.மதன்மோகன், 115வது வட்ட கழகச் செயலாளர் ஜி.வெங்கடேஷ், 115 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஈஸ்வரி வேங்கடசன் மற்றும் சிறு பான்மையின மாணவ மாணவிகள், உலமாக்கள் மற்றும் தேவாலய உபதேசியர்களுடன் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட , மாநகர, பகுதி, நகரம் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகளும் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவொற்றியூர் க.வீராசாமி
### நவம்பர் 24 (2008)



திருவொற்றியூர் நகரத்தில் ஆரம்பகால கழகத் தோழர்.

திருவொற்றியூர் நகரக் கழக அவைத்தலைவராக, மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர். கழகத்தின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை பெற்றவர்.

திருவொற்றியூர் நகரமன்ற உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும், அசோக்லேலண்ட் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் மற்றும் நாணய சங்கத்தின் தலைவராகவும் இருந்து திறம்பட பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்ட தொ.மு.ச. மாவட்ட தலைவராக பணியாற்றி தொழிலாளர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**